## கம்பம் நகராட்சி

**2018–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் (31.10.2018) ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் 04.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

## கூட்டப் பொருட்கள்

| | |
|---|---|
| 1. | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 10/2018–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| 2. | நகராட்சி பொறியாளர் அவர்களின் 10/2018–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| 3. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 3–ல் அமைந்துள்ள நகராட்சி சமுதாயகூடம் சுமார் 2003–ல் கட்டப்பட்டு இந்நாள்வரை மராமத்துப்பணி செய்யப்படாததால் மிகவும் பழுதாகி உள்ளது. மேற்கண்ட இடம் நகரின் பிரதான சாலையான தேனி– குமுளி சாலையில் அமைந்துள்ளதாலும், பொதுமக்களின் அத்தியாவசிய தேவைக்கு பயன்படுவதாலும் மேற்படி கட்டித்தினை பழுது நீக்கம் செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு (கழிப்பிட வசதி, குடிநீர் வசதி , டைல்ஸ் தளம் அமைத்தல் மற்றும் பெயிண்டிங் மற்றும் இதர பணிகள் )செய்து குத்தகைக்கு விடும்பட்சத்தில் இந்நகராட்சி வருவாய் ஏற்படவும் வாய்ப்புள்ளது. எனவே, மேற்கண்ட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 20,00,000/– (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) –க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். |
| 4. | இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1567, நாள். 13.08.2018 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி பொதுநிதி 2018–19ன் கீழ் இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள நவீன எரிவாயு தகன மேடையில் பழுதாகியுள்ள உபகரணங்களை மாற்றுதல் மற்றும் பழுதுகள் சரிசெய்தல் பணிகள் மேற்கொள்ள 10.10.2018ல் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வலைதளம் வழியாக (Online) ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மேலும், நேரடியாக (Off line) கீழ்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு 10.10.2018 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டது. |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1. | Thiru. D. Shankar, M/S. SS Engineering Works, Chennai |
| 2. | M/S. Good Care Enviro System Pvt Ltd |
| 3. | M/S. Aever Industries, Dindigul |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் 22.10.2018 அன்று தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் (TechnicalBid) திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் திட்டப் பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது அதன் விபரம்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1. | Thiru. D. Shankar, M/S. SS Engineering Works, Chennai |
| 2. | M/S. Good Care Enviro System Pvt Ltd |

தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 22.10.2018 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1. | Thiru. D. Shankar, M/S. SS Engineering Works, Chennai | மதிப்பீட்டு தொகைக்கு (+) 0.59 % குறைவு |
| 2. | M/S. Good Care Enviro System Pvt Ltd | மதிப்பீட்டு தொகைக்கு (+) 6.67 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.59% சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு. டி.சங்கர், திருவாளர்கள். எஸ்.எஸ். இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சென்னை–107 ஒப்பந்ததாரரிடமிருந்து விலைக்குறைப்பு செய்ய கோரியதில், ஒப்பந்ததாரர் தற்போதைய பொருட்கள் விலை மற்றும் பணியாளர்களின் கூடுதல் சம்பள ஏற்றத்தினாலும் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள 0.59% சதவிகித விலை விகிதத்தினை குறைக்க இயலாது என 25.10.2018ஆம் தேதியில் கடிதம் வழங்கியுள்ளார். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** வரப்பெற்ற தகுதிவாய்ந்த இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.59% சதவிகிதம் குறைவாக வழங்கியுள்ள திரு. டி.சங்கர், திருவாளர்கள். எஸ்.எஸ். இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சென்னை–107 ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் பரிசீலினைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. ( ந.க.எண்.382/2018/இ1 )

**5.** இந்நகராட்சி கணினி பிரிவு மற்றும் இதர பிரிவுகளில் உள்ள கணினிகள், அச்சுப்பதிப்பான்கள் (Priniter), தடையில்லா மின்வழங்கிகள் (Uninterrupted Power Supply), மற்றும் இதர உரபரணங்களின் ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் (Annual Maintenance Contract ) மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும், பயன்பாட்டு காலம் முடிவடையும் நிலையில் உள்ள மின்கலன்களை மாற்றி புதிதாக மின்கலன்கள் வாங்க வேண்டியுள்ளது.

இத்துடன் கூடுதலாக கணினி, அச்சுப்பதிப்பான்கள் வைரஸ் தடுப்பு மென்பொருள்கள், வலையமைப்பு உபகரணங்கள் (Network devices) மற்றும் இதர கணினி சார்ந்த பொருள்கள் வாங்கிப் பொறுத்த வேண்டியுள்ளது. எனவே, கணினிசார் பணிகளுக்கான செலவினம் மேற்கொள்ளவும், உத்தேச செலவினம் ரூ. 3,00,000/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| 6. | சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் நகராட்சி பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு பணிக்காக DBC பணியாளர்கள் அனைத்து வீடுகளுக்கும், ஒவ்வொரு வாரமும் செல்வதை உறுதி செய்யும் விதமாக ஒவ்வொரு வீட்டிலும் ஸ்டிக்கர் ஒட்டி, அதில் வீட்டை ஆய்வு செய்யும் நாளில் கையொப்பமிடவும், கொசுப்புழு இல்லாத வீடுகளில் சிரிக்கும் பொம்மை (Smily Sticker) ஒட்டப்படவேண்டுமென அறிவுறுத்தியதற்கிணங்க, கம்பம் நகராட்சி பகுதிகளில் உள்ள மொத்தம் 19786 குடியிருப்புகளில் ஸ்டிக்கர் ஒட்டும் வகையில் இரண்டு வகையான ஸ்டிக்கர்கள் அச்சடிப்பதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2,10,000/—க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் அச்சடிப்பதற்கும், மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்குவதற்கும், பொது நிதியிலிருந்து மேற்படி செலவினத் தொகையை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 7. | இந்நகராட்சிக்கு சொந்தமான மினிலாரி TN 60 Y 1959 —இல் கியர் பாக்ஸ் மற்றும் கிளட்ச் பழுதடைந்துவிட்டது. எனவே, மேற்படி கியர் பாக்ஸ் மற்றும் கிளட்ச் பழுது பணியினை செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 35,000/—ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம். |

**ஒப்பம்/— திரு ந.சங்கரன்,**
**ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 31.10.2018**
**இடம். கம்பம்**